சரஸ்வதி களஞ்சியம்

# ஒரு முன்னுரையும் சில கட்டுரைகளும்..

விஜயா பதிப்பகம்
(அறிவுலகவாதிகளின் அட்சயபாத்திரம்)
20, இராஜ வீதி,
கோவை © 394614

...இனி இவர்கள் புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதைப் பார்த்தால் மகா விநோதமாயிருக்கும். ஒரு கல்வியதிகாரி, 'கதிர்காம யாத்திரை' என்ற ஸ்ரீ கி.வா. ஜகந்நாதனவர்களின் நூலை 'காம' என்ற வார்த்தை வந்திருப்பதாக ஆட்சேபனை கூறி அடித்துவிட்டார். மற்றொரு அதிகாரி, டாக்டர் வரதராசனாரின் அரசாங்கப் பரிசு பெற்ற 'கள்ளோ காவியமோ' நூலில் 'கள்' என்ற வார்த்தையைக் கண்டு புத்தகப் பட்டியலில் இருந்தே அடித்து விட்டார்.

தமிழிலே நல்ல நூல்கள் வெளிவர வேண்டுமாயின் இந்த 'ஆட்சேபணை'த் தொல்லை ஒழிய வேண்டும்

- கண. முத்தையா

சரஸ்வதி ஆகஸ்டு 1957

என் யோசனை. தமிழ் நாட்டில் குறைந்தது மாதம் 50 புத்தகங்கள் விற்கும். புத்தகம் ஒன்றுக்கு 10,000 பிரதிகள் வரை அச்சிடலாம். 10,000 பிரதிகள் என்பது நாம் விற்காது என்று நினைக்கும் புத்தகங்களைப் பற்றி. சில புத்தகங்கள் லட்சம் பிரதிகள் வரை அச்சிடலாம்.

பதிப்பாள நண்பர்களே! முரசம் கொட்டுங்கள், மலிவுப் பதிப்புப் பிரசுரங்களைத்தான் வெளியிடுவோமென்று, மக்களுக்கான அரிய நூல்களை மலிவான விலையில் வெளியிடுவோமென்று!

- வை.கோவிந்தன்

சரஸ்வதி ஆகஸ்டு 1957

உயர்ந்த தொழில் செய்கிறோம் என்ற செருக்கு வேண்டும். புத்தகப் பதிப்புத் தொழில் என்பது முறைகேடான காரியங்கள் செய்து லாபம் சம்பாதிக்கும் தொழில் அல்ல. சமையல், வாஸ்து ஜோதிட புத்தகங்கள் விற்கின்றன என்பதற்காக அவற்றை மட்டுமே வெளியிட்டுப் பயனில்லை. நல்ல புத்தகத்தையும் எழுத்தாளனையும் அறிந்து கொள்ளத் தெரியவேண்டும். ஏனெனில் மனிதர்களை விடப் புத்தகங்கள் உயர்வானவை.

- மு.வேலாயுதம்

நேசிக்கத் தெரிந்தவர்கள் நேசிக்க வேண்டும். பதிலுக்கு நேசம் கிட்டாது. கிட்டினாலும் நெடுநாள் ஒட்டாது. ஆனாலும் நாம் நேசிக்க வேண்டும். நேசிக்க முடியாதவர்கள் பற்றியும் நேசிக்க மறந்தவர்கள் பற்றியும் யோசிக்க வேண்டும். யாரும் யோசிக்க வில்லையே என்று வருந்தற்க! நேசிக்க கற்க வேண்டும். நேசிக்க கற்பிக்கவும் வேண்டும்.

இது வாழ்க்கை எனக்குத் தந்த படிப்பினை

– ஜெயகாந்தன் –

Ashok, 98430-75165